


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.08.2023) முகாம் அலுவலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், நாளை தனது பிறந்தநாளையொட்டி முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.



பின்னணிப் பாடகர் “கலைமாமணி” டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, நேற்று (16.8.2023) மதுரை, முனிச்சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள “கலைமாமணி” டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.




## முரசொலிமாறன் 90வது பிறந்தநாள் இன்று!

# ‘முரசொலி’ வளாக முகப்பிலுள்ள முரசொலிமாறன் திருவுருவச் சிலைக்கு பொதுச் செயலாளர் துரைமுருகன் - அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவிக்கின்றனர்!

### மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



முத்தமிழறிஞர் கலைஞரின் மனசாட்சியாக விளங்கியவரும் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாக செயல்பட்டவரும் - மத்திய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாக பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 90வது பிறந்த நாளினை முன்னிட்டு இன்று (17.8.2023 - வியாழக்கிழமை) காலை 8.00 மணியளவில் கோடம்பாக்கம், ‘முரசொலி’ அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் திருவுருவச் சிலைக்கு கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மலர்மாலை அணிவிக்கின்றனர்.

அதுபோது முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழகப் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், சார்பு மன்றம், படிப்பகங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நாள்- 16.8.2023** **சென்னை மாவட்ட தி.மு.க.**



## தி.மு.க. இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி

### கழக இளைஞர் அணி – மாணவர் அணி – மருத்துவ அணி மாவட்ட – மாநில – மாநகர அமைப்பாளர் ஆலோசனைக் கூட்டம்

**அணிகளின் செயலாளர்கள் அறிவிப்பு**

தி.மு.க இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி ஆகிய கழக அணிகளின் மாவட்ட – மாநில – மாநகர அமைப்பாளர் ஆலோசனைக் கூட்டம் அணிகளின் மாநில தலைவர்கள், துணைத் தலைவர்கள், இணை, துணைச் செயலாளர்கள் முன்னிலையில் 17–08–2023, வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து - அவர்களின் உயிரைப் பறிக்கின்ற நீட் தேர்வைத் திணிக்கும் ஒன்றிய அரசையும், அத்தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்கான தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் ஆளுநரையும் கண்டித்து ஆகஸ்ட் 20 ஞாயிற்றுக்கிழமை அன்று மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற உள்ள மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் தொடர்பாக.

**சி.வி.எம்.பி.எழிலரசன்**
செயலாளர்
திமுக மாணவர் அணி

**எழிலன் நாகநாதன்**
செயலாளர்
திமுக மருத்துவ அணி

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
திமுக இளைஞர் அணி

சென்னை – 18. நாள் : 16–08–2023.